# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2296/37 - 2022 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2022.09.09

*2296/37 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்*

***1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்***

கட்டளை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 அ பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகள் ஊடாக எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரான தினேஷ் குணவர்தன ஆகிய நான், 1987 மே 12 ஆந் திகதிய 453/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றினூடாக நிறுவப்பட்ட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் எல்லைகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு புதிய பிரதேச சபையொன்றினூடாக அந்தப் பிரதேச சபையை மறுசீரமைப்பதற்காக 2023, மாச்சு மாதம் 19 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கலைத்துவிடுகின்றேன்.*

**தினேஷ் குணவர்தன,**
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக,
உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
*2022, செத்தெம்பர் 05.*


1A - G 37431 — 16 (2022/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்**

கட்டளை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உப பிரிவு, 4 ஆம் பிரிவு, 6 ஆம் பிரிவு ஆகிய பிரிவுகளூடாக எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரான தினேஷ் குணவர்தன ஆகிய நான், இந்தக் கட்டளையூடாக -*

(1) இந்த அட்டவணையின் I ஆவது பகுதியில் சித்தரிக்கப்பட்டுள்ள இடப்பரப்பு அந்த சட்டத்தின் அலுவல்களுக்காக பிரதேச சபைக்குரிய இடப்பரப்பாக இருத்தல் வேண்டுமென பிரகடனப்படுத்துகின்றேன்.

(2) அந்த அட்டவணையின் II ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை அந்த பிரதேச சபைக்குட்பட்ட இடப்பரப்பின் நிருவாக எல்லைகளாகத் தீர்மானிக்கின்றேன்.

(3) இந்தக் கட்டளையின் (1) ஆம் பந்தியின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபைக்குட்பட்ட இடப்பரப்புக்காக பிரதேச சபையொன்றை நிறுவி, அந்தப் பிரதேச சபைக்கு கீழ் குறிப்பிடப்படும் பெயரை இடுகின்றேன்.

**"திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை"**

(4) திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை,

i. பிரதேச சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் 11 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமித்துக்கொள்ளப்படல் வேண்டுமெனவும்,

ii. பிரதேச சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவின் (ஆ) ஆம் பந்தியின் கீழ் 7 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமதித்துக்கொள்ளப்படல் வேண்டுமெனவும்,

iii. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 ஆ பிரிவின் (4) ஆம் உப பிரிவின் (அ) பந்தியின் கீழ் தேர்தல்கள் ஆணையாளரால் நிச்சயிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும்,

உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகின்றேன்.

(5) திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் பதவிக்காலம் ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதியை 2022 மாச்சு மாதம் 20 ஆந் திகதி என நிர்ணயிக்கின்றேன்.

**தினேஷ் குணவர்தன,**
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக,
உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
2022, செத்தெம்பர் 05.

**அட்டவணை**

பகுதி - I

*கீழ் குறிப்பிடப்படும் கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட நிலப் பகுதியைக் கொண்ட பிரதேசம் :-*

சாம்பல்தீவு (242), சல்லி (242 - A), இலுப்பைக்குளம் (242 - B), உப்புவெளி (243), புளியங்கும் (243 - L), ஆண்டான்குளம் (243 - A), மாங்காயூற்று (243 - K), பீலியடி (243 - J), கன்னியா (243 - B), வில்கம் (243 - E), வெல்வெறி (243 - Q), வரோதயநகர் (243 - N), சுமேதரங்காபுர (229 - B), முத்துநகர் (229 - F), கப்பல்துறை (229 - E), காவத்திக்குடா (229 - D), நாச்சிக்குடா (229 - C), வெள்ளைமணல் (229), செல்வநாயகபுரம் (243 - M), மிகிந்துபுர (229 - I), அன்புவெளிபுரம் (243 - C), சீனக்குடா(229 - A),

பகுதி - II

*திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிருவாக எல்லை :-*

***வடக்கே -***

*அநுராதபுரம் - திருகோணமலை வீதியின் 104 ஆம் கிலோமீட்டர் கட்டையிலிருந்து கால்வாய் வரை கற்காட்டுக்குளம் வயல் வெளி வரை கரத்தை பாதை வழியே வடகிழக்கு நோக்கி, வடக்கு நோக்கி மற்றும் மீண்டும் வடகிழக்கு நோக்கி, கண்டல்கட்டு - பெரியகுளம் பாதையை சந்திக்கும் வரை (பெரியகுளம் வாவியிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர்). அதன் பின்னர் பெரியகுளம் வாவியினதும் பொக்கான்குளம் வாவியின் மொத்தக் கொள்ளளவு மட்டக் கோட்டினூடாக தென்மேற்கு நோக்கி மற்றும் தெற்கு நோக்கி மற்றும் உள் சுற்றுவட்டப் பாதையை சந்திக்கும் இடம் வரை. (திருகோணமலை - புல்மோட்டை வீதியிலிருந்து சுமார் 2/21 கிலோமீட்டர்) உள்ளக.*

*திருகோணமலை - புல்மோட்டை வீதி வரை உட்பட சுற்றுவட்டப் பாதை வழியே வடகிழக்கு நோக்கி, வடமேற்கு நோக்கி மற்றும் மீண்டும் வடகிழக்கு நோக்கி ஆறாம் கிலோமீட்டர் சந்தியை சந்திக்கும் இடம் வரை (ஆறாம் கட்டை என குறிப்பீடு செய்யப்படும இடம்). அதன் பின்னர் இந்து சமுத்திர கடற்கரையைச் சந்திக்கும் வரை கோணேஷபுரம் பாதையின் மத்திய கோடு வழியே (கிழக்குப் பல்கலைக்கழக வீதி) வடகிழக்கு நோக்கி மற்றும் கிழக்கு நோக்கி.*

***கிழக்கே -***

*திருகோுணமலை - புல்மோட்டை வீதியின் மூன்றாம் கிலோமீட்டர் கட்டை (மூன்றாம் கட்டை எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஊடாகச் செல்லும் வளர்மதி மாவத்தையின் மத்திய கோட்டை சந்திக்கும் வரை கடற்கரை வழியே இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து தெற்கு மற்றும் தென்மேற்கு நோக்கி. அதன் பின்னர் விருப்பமான கோடொன்றின் வழியே அன்புவெளிபுரத்தில் பிள்ளையார் கோயில் பாதையை சந்திக்கும் வரை தெற்கு நோக்கி மற்றும் தென்மேற்கு நோக்கி (திருகோணமலை - கண்டி வீதியில் சுமார் 0.3 கிலோ மீட்டர் 158 ஆம் கட்டைக்கு அருகே) அதன் பின்னர் புகையிரத வீதி ஊடறுத்துச் செல்லும் பாதை சந்திக்கும் வரை (சீமேந்து தொழிற்சாலை நுழைவாயிலுக்கு அருகில்) திருகோணமலை - மட்டக்களப்பு வீதி வழியே திருகோணமலை - கண்டி வீதியின் மத்திய கோட்டின் வழியே மேற்கு நோக்கி, மற்றும் தென்மேற்கு நோக்கி மற்றும் தென்கிழக்கு நோக்கி (156 ஆம் கிலோமீட்டர் கட்டை சந்தி நான்காம் கட்டை எனக் குறிப்பீடு செய்யப்படும்) மட்கோவ் இல் (Mud Cove) கடற்கரையை சந்திக்கும் வரை புயிரத வீதி ஊடறுத்துச் செல்லும் பாதையிலிருந்து (புகையிரத வீதி வழியே ஊடறுத்துச் செல்லும் பாதையிலிருந்து சுமார் 0.72 கிலோ மீட்டர் தூரம்) புகையிரத வீதி வழியே வடகிழக்கு நோக்கி மற்றும் தென்கிழக்கு நோக்கி. அதன் பின்னர் மார்பல் பீச் வரை கடற்கரை வழியே தெற்கு நோக்கி, மேற்கு நோக்கி, தென்மெற்கு நோக்கி, கிழக்கு நோக்கி, வடகிழக்கு நோக்கி, மேற்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி மட்கோவ் (Mud Cove), வடக்கு சிறு வளைகுடா (North Core), கண்டல் சிறு வளைகுடா (Mangrove Cove), கொட் விரிகுடா (Cod bay), சீன விரிகுடா (China Bay), மலே சிறிய வளைகுடா (Malay Cove), சன்ங் சிறிய வளைகுடா (Snug Cove), கிளைபன்பர்க்சிறிய வளைகுடா (Clappenburg Cove), டெட்மன் சிறிய வளைகுடா (Deadman Cove), கரிமலையூற்று, பெரியமலைக்குடா, மார்ப்பல் பீச்.*

***தெற்கே -***

இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து கடற்கரை வழியே மேற்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி, தெற்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி, தெற்கு நோக்கி மற்றும் மிண்டும் தென்மேற்கு நோக்கி மற்றும் கிண்ணியா பாலம் மற்றும் தம்பலகாமம் விரிகுடா ஊடாக பாலம்பட்டாறின் (பாலம்போட்ட ஆறு) மத்திய கோடு தம்பலகாமம் விரிகுடாவை சந்திக்கும் இடம் வரை (கிண்ணியா படகுத்துறை மற்றும் தம்பலகாமம் விரிகுடா)

***மேற்கே -***

இறுதியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து ஹபரண - திருகோணலை வீதியல் பாலம்பட்டாறு பாலத்தின் மத்திய கோடு வழியே வடமேற்கு நோக்கி. அதன் பின்னர் பிரதேசத்தின் (இடப்பரப்பின்) வடக்கு எல்லைக ஆரம்பிக்கும் இடம் வரை அதாவது 104 ஆம் கிலோமீட்டர் கட்டை வரை சுமார் 9.6 கிலோமீட்டர் தூரம் வரை தன்னிச்சை கோடொன்றின் (arbitrary line) வழியே வடகிழக்கு நோக்கி.

EOG 09 - 0080/1

**நகர சபைகள் கட்டளைச் சட்டம்**

கட்டளை

*(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 14 ஆவது பிரிவில் (ஈ) பந்தியில் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஸ் குணவர்தன ஆகிய நான், 1978 ஆம் ஆண்டு ஓகத்து 10 ஆந் திகதிய 329/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் தாபிக்கப்பட்ட திருகோணமலை நகர சபை, திருகோணமலை மாநகர சபையாக தாபிப்பதற்காக 2023 ஆம் ஆண்டு மாச்சு 19 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வகையில் கலைக்கின்றேன்.*

**தினேஷ் குணவர்தன,**
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக,
உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
2022, செத்தெம்பர் 05.

**மாநகர சபைக் கட்டளைச் சட்டம்**

கட்டளை

*மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தில் (252 ஆம் அதிகாரம்) 2, 3, 5 மற்றும் 9 ஆகிய பிரிவுகளால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு பிரமதர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஸ் குணவர்தன ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம் –*

(1) இங்கு அட்டவணையின் I ஆவது பகுதியில் குறிப்பிடப்படும் பிரதேசம் அந்தக் கட்டளைச் சட்டத்தின் கருமங்களுக்காக மாநகரமாதல் வேண்டுமென பிரகடனப்படுத்துகின்றேன்.

(2) அந்த அட்டவணையின் II ஆவது பகுதியில் குறிப்பிடப்படும் எல்லைகள், அந்த மாநகரத்தின் நிருவாக எல்லைகளாதல் வேண்டுமென நிர்ணயிக்கின்றேன்.

(3) இந்தக் கட்டளையின் (1) ஆவது பந்தியின் கீழ் பிரகடனப்படுத்திய மாநகரத்திற்காக மாநகர சபை தாபித்து, அந்த மாநகர சபைக்கு பின்வரும் பெயரையும் உத்தியோகப்பூர்வ பெயரையும் குறிக்கின்றேன்.

**"திருகோணமலை மாநகர சபை"**

(4) திருகோணமலை மாநகர சபையானது, நகர முதல்வர் ஒருவர், பிரதி நகர முதல்வர் ஒருவர் அடங்கலாக பின்வரும் i, ii மற்றும் iii ஆவது பந்திகள் பிரகாரம், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மற்றும் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டுமென கட்டளையிடுகின்றேன்.

i. (252 ஆம் அதிகாரம்) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தில் 5 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் (அ) பந்தி பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் "15" பேரையும்;

ii. (252 ஆம் அதிகாரம்) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தில் 5 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் (ஆ) பந்தி பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் "10" பேரையும்;

iii. (252 ஆம் அதிகாரம்) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தில் 5 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் (இ) பந்தி பிரகாரம் (262 ஆம் அதிகாரம்) உள்ளூராட்சி அதிகார சபையின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தில் 65(ஆ) பிரிவின் (4) ஆவது உட்பிரிவில் (அ) பந்தியின் கீழ் தேர்தல்கள் ஆணையாளரால் தீர்மானிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ;

கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இந்த மாநகர சபையின் உறுப்பினர்களது பதவிக் காலம் 2023 ஆம் ஆண்டு மாச்சு 20 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருதல் வேண்டுமென கட்டளையிடுகின்றேன்.

**தினேஷ் குணவர்தன,**
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக,
உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
2022, செத்தெம்பர் 05.

**அட்டவணை**

பகுதி - I

கீழ் குறிப்பிடப்படும் கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட நிலப் பகுதியைக் கொண்ட பிரதேசம் :-

மனையாவெளி (244 - F), வில்லூன்றி (244 - E), அருணகிரிநகர் (244 - G), சோனகவாடி (244 - I), தில்லைநகர் (244 - H), அரசடி (244 - J), பட்டணத்தெரு (244 - K), பெரந்தெரு (244 - L), சிவபுரி (244 - Q), உவர்மலை (244 - P), திருக்கடலூர் (243 - F), முருகாபுரி (243 - G), ஜின்னாநகர் (249 - O), அபயபுர (244 - N), லிங்கநகர் (244 - R), மட்டிக்களி (மட்கோவ்) (244 - M), பாலையூற்று (243 - D), பூம்புகார் (243 - O), கோவிலடி (243 - P), சிங்கபுர (243 - H),

பகுதி - II

திருகோணமலை மாநகர சபையின் நிருவாக எல்லைகள் :-

***வடக்கே -***

திருகோணமலை ஹபரணை வீதியின் 156 ஆம் கிலோமீட்டர் கட்டை சந்தியிலிருந்து (நான்காம் கட்டை எனக் குறிப்பீடு செய்யப்படும்) அன்புவெளிபுரத்தில் பிள்ளையார் கோவிலுக்கு திருகோணமலை - ஹபரணை வீதியின் மத்திய கோடு வழியே வடகிழக்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி, மீண்டும் வடகிழக்கு நோக்கி, வடக்கு நோக்கி மற்றும் பிள்ளையார் கோவில் வீதி வழியே (திருகோணமலை - கண்டி வீதியிலிருந்து சுமார் 0.3 கிலோ மீட்டர் தூரத்தில் 158 ஆம் கட்டைக்கு அருகில்) அதன் பின்னர் லவ் லேன் இனை சந்திக்கும் வரை தன்னிச்சைக் கோடொன்றின் வழியே வடகிழக்கு நோக்கி, வடக்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி, வடகிழக்கு நோக்கி மற்றும் கிழக்கு நோக்கி 3 ஆம் கிலோ மீட்டர் கட்டை (3 ஆம் கட்டை என குறிப்பீடு செய்யப்படும்) ஊடாக. அதன் பின்னர் வளர்மதி மாவத்தை சந்தியை சந்திக்கும் வரை ஏகாம்பரம் வீதி வழியே (3 ஆம் கிலோ மீட்டர் கட்டையிலிருந்து - 3 ஆம் கட்டை என குறிப்பீடு செய்யப்படும்) மற்றும் அதன் பின்னர் வளர்மதி பாதையின் மத்திய கோட்டினூடாக இந்து சமுத்திரத்தின் கரையோரம் வரை.

***கிழக்கே -***

கடற்படையின் எலிபன்ட் பொயின்ட் கடற்கரையை சந்திக்கும் இடம் வரை இறுதியாக குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து இந்து சமுத்திர கடற்கரை வழியே தெற்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி, வடகிழக்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி, மேற்கு நோக்கி, தெற்கு நோக்கி, கருப்பு விரிகுடா (Black Bay), திருக்கோணேஷ்வரம் கோயில், முனை (Edge), ஒல்லாந்தர் விரிகுடா (Dutch bay), மணல் விரிகுடா பீச் (Sandy Bay Beach), கிரீன் பே பீச் (Green Bay Beach) மற்றும் எலிபன்ட் பொயின்ட் பீச் (Elephant Point Beach)

***தெற்கே -***

இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து கடற்கரை வழியே தன்னிச்சைக் கோடொன்றின் வழியே புகையிரதப் பாதை வரை (சீமெந்து தொழிற்சாலைக்கு அண்மை வரையிலான இடமொன்று) கிழக்கு நோக்கி, வடகிழக்கு நோக்கி, தென்மெற்கு நோக்கி, வடகிழக்கு நோக்கி, வடமேற்கு நோக்கி, தென்கிழக்கு நோக்கி மற்றும் மீண்டும் வடகிழக்கு நோக்கி, வடமேற்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி (Nicholson Cove, Inner Harbour, Powder Bay, Yard Cove, Mud Cove, North Cove) வடக்கு நோக்கி, வடமேற்கு நோக்கி, தென்மேற்கு நோக்கி மற்றும் புகையிரதப் பாதை வழியே திருகோணமலை - மட்டக்களப்பு வீதியின் புகையிரதம் கடக்கும் பாதை வரை.

***மேற்கே -***

இறுதியாகக் குறிப்பிடப்பட்ட இடத்திலிருந்து 156 ஆம் கிலோமீட்டர் கட்டையை சந்திக்கும் வரை திருகோணமலை - மட்டக்களப்பு வீதியின் மத்திய கோட்டின் வழியே வடமேற்கு நோக்கி, வடகிழக்கு நோக்கி மற்றும் திருகோணமலை - ஹபரணை வீதியின் மத்திய புள்ளி வழியே.

EOG 09 - 0080/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.